ஈரோடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் – முனைவர். இரா. முருகன்.

ந.க.எண் 4514 / அ 1 / 2021 நாள் 12.08.2021

பொருள் நியமனம் (நேரடி) – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தொகுதி IV க்குட்பட்ட இளநிலை உதவியாளர் பணியிடம் – தமிழ்நாடு அரசுப்பணி தேர்வாணையக்குழு தொகுதி IV – 2018-19 மற்றும் 2019-20 ஆண்டுக்கு தேர்வு செய்யப்பட்டவர்கள் – பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிநியமனம் வழங்கப்பட்டது – பணியில் சேர்ந்த இளநிலை உதவியாளர் பணியினை – இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

பார்வை
1. அரசாணை (நிலை) எண் 101 பள்ளிக் கல்வித் (வரவு–செலவு–1) துறை நாள் 18.05.2018
2. சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு செயலாளரின் கடிதம் எண் 2563 / PSD – 12 / 2020 நாள் 21.07.2020.
3. ஈரோடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண் 2399 / அ 1 / 2020 நாள் 17.09.2020.
4. கோபிசெட்டிபாளையம், மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண் 3845 / அ 1 / 2021 நாள் 10.08.2021

---

**ஆணை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தொகுதி IV –க்குட்பட்ட 2018-19 மற்றும் 2019-20 ஆண்டுக்கு தேர்வு செய்யப்பட்டு, பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வைக் குறிப்பு – 3 ன்படி, நியமனம் செய்யப்பட்டுள்ள கீழ்காணும் இளநிலை உதவியாளருக்கு, அவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில், அன்னார் பணியேற்ற நாள் முதல் கீழ்கண்டவாறு வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

| வ.எ | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் / பள்ளி | இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு. பூ, பாலாஜி<br>இளநிலை உதவியாளர்<br>அரசு உயர் நிலைப்பள்ளி,<br>வலையபாளையம், ஈரோடு மாவட்டம் | 21.09.2020 | 21.09.2020 |

மேற்படி பணிவரன்முறை ஆணை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டது.

1. பணி அமர்வு விதிகளின்படி இவர் மூன்றாண்டு தொடர் பணியில், இரண்டாண்டு தகுதி காண் பருவம் முடிக்கப்பட வேண்டும்.
2. " The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras Relating to the recruitment to the post included in Combined Civil services Examination – IV for the year 2018-19 & 2019-20

மேற்கண்ட இளநிலை உதவியாளர் பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதற்கான அறிக்கையை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி சம்மந்தப்பட்ட அலுவலர்கள் / பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அன்னாரின் அசல் பணிப்பதிவேடு இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது. பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலினை அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பணிப்பதிவேடு அசல்

முதன்மைக் கல்வி அலுவலர்
ஈரோடு
12/8/21

பெறுநர்

மாவட்டக் கல்வி அலுவலர், கோபிசெட்டிபாளையம் (சம்மந்தப்பட்ட பணியாளருக்குரிய கூடுதல் நகலுடன்).

நகல் – தலைமையாசிரியர், அரசு உயர் நிலைப்பள்ளி, வலையபாளையம், ஈரோடு மாவட்டம்.